21.02.2025.                    Letters of Administration O.P.No. 58 of 2021

P.W. 1 (வெங்கடேசன்)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கின் சொத்து தொடர்பாக வேறு ஏதாவது வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் ரவி என்பவர் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு எண் தெரியாது. எந்த நீதிமன்றத்தில் அந்த வழக்கு உள்ளது என்றால் இந்த நீதிமன்றத்தில் இருந்தது. இந்த நீதிமன்றத்தில் இருந்து வேறொரு நீதிமன்றத்திற்கு மாற்றம் ஆனது பற்றி தெரியாது.

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றத்தில் 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வழக்கை பற்றி தெரியும். உயில் செல்லாது என்று அந்த வழக்கை தாக்கல் செய்தார். அந்த உயில் செல்லாது. அந்த வழக்கை தள்ளுபடி ஆன பின்னர் மீண்டும் மனு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது பற்றி எனக்கு தெரியாது. அதே நீதிமன்றத்தில் EP 65/2022 வழக்கு உள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

நான் அளித்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ளவைகளை நான் சொல்லித்தான் பதிவு செய்தார்கள். அந்த வாக்குமூலத்தில் 3வது பக்கத்தில் 11 வரியில் போடப்பட்ட நிறைவேற்றுகை மனு எண்.

65/2022 எதற்காக போடப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.21 17:19:03 +0530